**மன்றப்பொருள்**

**2020** ம் ஆண்டு மார்ச் **30.04.2020** ம் தேதி வியாழன்கிழமை மாலை **5.00** மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (கூ.பொ) அவர்களின் ஏப்ரல் **2020**ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
   அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்
2. பண்ணுருட்டி நகராட்சி, பொது சுகாதார பிரிவு, இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். **3040/2018/எச்1** நாள். **22.02.19–ன்படி** இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதி கடிதம் ந.க.எண். **32976/ஜெ3/2018** நாள். **11.12.2018–ன்படி 97** ஒப்பந்த தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் எடுத்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதின் பேரில் **24.01.2019–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பண்ருட்டி AIMS Assiciates குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியதின் காரணமாக அந்நிறுவனம் பணி மேற்கொள்ள இந்நகராட்சியின் நகர்மன்ற தீர்மானம் எண். **303** நாள். **06.02.2019–ல்** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி மேற்கண்ட AIMS Associates நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள **22.02.2019–ந்** தேதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி ஓராண்டு மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டது.

   இப்பணி உத்திரவு **22.02.2019** முதல் **21.02.2020** வரை வழங்கப்பட்டு ஓராண்டு முடிவடைந்தநிலையில் நிர்வாக காரணம் கருதி ஏற்கனவே AIMS Associates நிறுவனத்துடன் போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதே சம்பள விகிதத்தில் மேலும் மூன்று மாதங்களுக்கு **22.02.2020** முதல் **21.05.2020** வரை நீட்டிப்பு செய்யப்பட்டது.

   இந்நிலையில் பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன், திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதியும், நகராட்சி நிர்வா ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு K.Dis.No. 32976/J3/2018 தேதி. **11.12.2018–ன்படி** மூன்று வருடங்களுக்கு நிர்வாக அனுமதி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள இந்நகராட்சி அனுமதி வழங்கப்பட்டதாலும்,

   தற்பொது இந்நிறுவனம் நல்லமுறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வருவதாலும் மேலும் கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு எண். M2/ 14889/2017 நாள். **19.06.2018–ல்** முழு நேர துப்புரவு பணியாளர்களுக்கு ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூபாய் **355/–** என தெரிவித்துள்ளார். தற்பொழுது கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு எண். M2/14889/2019 நாள். **08.07.2019–ன்படியும்** முழு நேர துப்புரவு பணியாளர்களுக்கு ஊதியம் ரூ.**395/–** நாள் ஒன்றுக்கு நிர்ணயம் செய்துள்ளார்.

   **19.06.2018–ந்** தேதிய மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி தூய்மை பணியாளர் ஒருநாள் ஊதியம் ரூ.**355**+ESI+EPF+LIC+Service Tax என்பதைவிட **08.07.2019–ந்** தேதிய மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி தூய்மை பணியாளர்களின் ஒரு நாள் ஊதியம் ரூ.**395**+ ESI+EPF+LIC+Service Tax அதிகப்படியாக உள்ளதாலும்

| | | | |
|---|---|---|---|
| 355 x 1 நபர் x 26 நாட்கள் | = | ரூ. | 9230.00 |
| 97 நபர்கள் x 26 நாட்கள் | = | ரூ. | 895310.00 |
| ESI 4.75% | = | ரூ. | 42527.00 |
| EPF 13.16% | = | ரூ. | 1,17823.00 |
| Service Tax 5% | = | ரூ. | 44766.00 |
| | | ரூ. | 11,00426.00 |

| | | | |
|---|---|---|---|
| வருடத்திற்கு 1100426 x 12 | = | ரூ. | 1,32,05112.00 |
| LIC 97 x 500 | = | ரூ. | 4,8,500.00 |
| சீறுடை 97 x ரூ.2000 | = | ரூ. | 1,94,000.00 |
| பாதுகாப்பு உபகரணங்கள் 97 x ரூ.3500 | = | ரூ. | 3,39,500.00 |
| | | ரூ. | 1,37,87000.00 |

ஃ ரூ. 1,37,87000.00

ஆக மொத்தம் வருடத்திற்கு 1,37,87000 தொகை தோராயமாக தனியார் மூலம் நியமிக்கப்படும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டி கடந்தமுறை 97 பணியாளர்களுக்கும் அதற்கான செலவினத்திற்கும் நகரமன்ற தீர்மான எண். 247 நாள். 28.12.2018 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 24.01.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s. AIMS Associates நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளதாலும்,

தற்பொழுது கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு M2/14889/2019 நாள். 08.07.2019–ன்படி தூய்மை பணியாளர் ஊதியம் ரூ.395x1x26 நாட்கள் = ரூ. 10270.00

| | | | |
|---|---|---|---|
| 97 நபர்கள் x 26 நாட்கள் | = | ரூ. | 996190.00 |
| ESI 4.75% | = | ரூ. | 47319.00 |
| EPF 13.16% | = | ரூ. | 1,31099.00 |
| Service Tax 5% | = | ரூ. | 49810.00 |
| | | ரூ. | 1,224,418.00 |

| | | | |
|---|---|---|---|
| வருடத்திற்கு 1224418 x 12 | = | ரூ. | 1,46,93016.00 |
| LIC 97 x 500 | = | ரூ. | 4,8500.00 |
| சீறுடை 97 x ரூ.2000 | = | ரூ. | 1,94,000.00 |
| பாதுகாப்பு உபகரணங்கள் 97 x ரூ.3500 | = | ரூ. | 3,39,500.00 |
| | | ரூ. | 1,52,75016.00 |

ஃ ரூ. 1,52,75016.00

பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி ஆண்டு செலவினம் (24.01.2019)

= ரூ. 1,37,87000.00

தற்பொழுது ஆண்டு செலவினம் = ரூ. 15275016.00

கூடுதல் = ரூ. 1488016.00

எனவே, 2019–ம் ஆண்டு ஒப்பந்த உத்தரவின்படி அதே தொகைக்கும் தூய்மை பணியாளர்களுக்கான ஊதியம் +ESI+EPF+LIC+Service Tax+LIC+Uniform+Safety Equipment = ரூ. 455/ per day / per head ஆண்டு தோராய செலவினம் ரூ. 1,.37,87000/– த்திற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு எண். K.Dis.No. 32976/J3/2018 நாள். 11.12.2018–ன்படி மூன்று வருடங்களுக்கு 97 தூய்மை பணியாளர்களை கொண்டு பணி செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாலும், செலவின அடிப்படையில் ஏற்கனவே உள்ள செலவினத்தை விட தற்பொழுது கூடுதல் ஆகும் என்பதாலும், தற்பொழுது கொரோனா வைரஸ் அதிக பாதிப்பை ஏற்படுத்தி வருவதாலும், பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன்கருதி ஏற்கனவே பணி செய்து வருகின்ற AIMS Associates நிறுவனம் நன்கு பணி செய்து வருவதால், அந்நிறுவனத்திற்கே மேலும் 21 மாதங்களுக்கு பணி நீடித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.2,41,27250/– ஒப்பந்த நிபந்தனைக்குட்பட்டு பணி செய்யவும், இவை அனைத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்க தனி அலுவலர் மற்றும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை பொதுமக்கள் மற்றும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோ.எண் 3040 /2020/ எச்1**

3. உலகமெங்கிலும் பரவியுள்ள கொள்ளை நோயான கோரோனா வைரஸ் பண்ருட்டி நகரில் பரவாமல் தடுப்பு நடவடிக்கையாக ஸ்பிரேயர் –16, பெட்ரோல் இஞ்சின் பொறுத்தப்பட்ட டாடா ஏஸ்–2ன் மூலமாக கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் 31.03.2020 அன்று பண்ருட்டி நகர எல்லையில் டெல்லி இஸ்லாமியர்கள் மாநாட்டிற்கு சென்று வந்த இரண்டு நபருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானதால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சத்யா பன்னீர்செல்வம் அவர்கள் 31.03.2020, 01.04.2020 மற்றும் 02.04.2020 ஆகிய மூன்று நாட்கள் மட்டும் இலவசமாக டிராக்டரில் பொறுத்தப்பட்ட மெகா ஸ்பிரேயர் மூலம் கிருமி நாசினி தெளிக்கப்பட்டது. வார்டு எண்.4 செட்டித் தெரு மற்றும் வார்டு எண்.24 குச்சிப்பாளையம் தெருவில் கொரோனா (+ve) –2 எண்ணிக்கை வந்ததாலும் மற்றும் வீட்டில் தனிமை படுத்துதலில் 4 எண்ணிக்கை இருப்பதால் ஒரு நாளைக்கு ஐந்து முறையும் அப்பகுதிகள் முழுவதும் (Containment Zone) தொற்று பரவாமல் இருக்க டிராக்டரில் பொறுத்தப்பட்ட மெகா ஸ்பிரேயர் இரண்டு பயன்படுத்தவும் ஒரு டிராக்டருக்கு ஒரு நாள் வாடகை ரூ. 7000/– ஆகும் எனவும், இரண்டு டிராக்டருக்கு ஒரு நாள் வாடகை 14,000/– ஆகும் எனவும் இத்தொகையினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன்படி அவசர அவசியம் கருதி டிராக்டர் மூலம் கிருமி நாசினி தெளித்து மேலும் தொற்று பரவாமல் இருக்க வகை செய்ய ஆணையர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்

**கோ.எண் /2020/எப்1**

4 . பண்ணுருட்டி நகராட்சி– பொங்கல் சிறப்பு மலர்– மாலை மலர் நாளிதழ் சார்பில் 'பொங்கல் சிறப்பு மலர்' வெளியிடுதல் சம்மந்தமாக விளம்பரம் வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் ந.க.எண். 07/செ.ம.தொ/2020 நாள். 08.01.2020–ந் தேதிய கடிதத்தில் நகராட்சி சார்பில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் வளர்ச்சி பணிகள் உட்பட பல்வேறு திட்டங்கள் மற்றும் பல சிறப்பு அம்சங்களை விளம்பரத்திற்கென்று அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதியிருப்பின் அரசு விளம்பரங்களை விளம்பரமாக வழங்கிடுமாறு தெரிவிக்கப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பொங்கல் மலர் 2020–ல் பக்கம் 49–ல் விளம்பரம் செய்யப்பட்டு இதற்கான பட்டியல் கேட்டு பட்டியலில் எண் CUD-D20010121 நாள். 13.01.2020–ல் ரூ. 8925/–ஐ கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையை 'மாலை மலர்' என்னும் மலர் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண்., 0402/இ1/2020

5. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளிலுள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகளில் பொறுத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மோட்டார்கள், பலவகைப்பட்ட PVC பைப், GI பைப்புகள், UG கேபிள்கள், மின் மோட்டார்கள் காயில் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் பணிக்கும் மேலும் கோடைக் காலங்களில் ஏற்படும் வறட்சியை முன்னிட்டு பொதுமக்களுக்கு சீரான பாதுகாப்பான குடிநீர் தங்குதடையின்றி வழங்கிடவும், 2020–21–ம் ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 645 / இ2 / 2020**

6 பண்ணுருட்டி நகராட்சி – தெருவிளக்கு தனியார் மூலம் பராமரிப்பு பண்ணுருட்டி நகராட்சியின் தெருமின் விளக்குகள் 1x40 வாட்ஸ்மொத்தம் 1600 எண்கள் கடந்த 2016-17 ம் ஆண்டு முதல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற விலை விகித ஒப்புதல் ந.க.எண். 13899/2016/டிஒ1 நாள் 24.11.2016 ந் தேதியிட்ட நிர்வாக அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியர் மூலம் பராமிக்கப்பட்டு 2017-18 ம் ஆண்டுக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2018 வுடன் முடிவடைந்துவிட்டது. ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள மேற்கண்ட குழல்விளக்குகள் 1600 எண்களை பராமரிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2016-17,2017-18 மற்றும் 2018-19 வரை மூன்று வருடங்களுக்க தொழிற்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால் ஒராண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தது. எனவே ஒப்பந்தக் காலம் 31.03.2018 ல் முடிவடைந்து 2018-19 ம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ. 15.81 லட்சத்திற்கு மன்றத்திற்கு பொருள் வைத்து மன்ற அனுமதி பெறப்பட்டு தனியர் மூலம் பராமரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண். 13899/2016/டிஒ1 நாள் 24.09..2018 ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியானை வழங்கப்பட்டு தெருகுழல்மின் விளக்குகள் பராமரிப்பு பணிகள் 05.02.2020 ல் முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் தெருகுழல் மின்விளக்குகள் 1600 எண்கள் பராமரிப்பு பணிகள் 2020-2021 ம் நிதியாண்டிற்றகு ரூ.13.28 இலட்சத்திற்கு மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரரின் செயல்திறனின் அடிப்டையில் 2021-2022, 2022-2023 ம் நிதியாண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் மன்ற அனுமதி , மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று நீட்டித்துக் கொள்ளவும், மேலும் அடுத்த ஆண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏதுவாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த நிறுவனத்தை முடிவு செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுதுள்ள விலை விகிதத்தில் தற்பொழுது பராமரிப்பு பணி செய்து வரும் நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை 31.03.2020 வரை நீட்டித்து கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 495 நாள் 31.01.2020ல் அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற வரைவு கடிதம் மற்றும் மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனோ வைரஸ் நோய் (COVID 19) ன் தடுப்பு நடவடிக்கைக்கு தற்சமயம் தமிழக அரசும், மத்திய அரசும் ஊரடங்கு 144 தடையுத்திரவை 24.03.2020 அன்று அறிவித்து 14.04.2020 வரை அமுலில் இருக்கும் என தெரிவித்தது. பிறகு மத்திய அரசு கொரோனோ வைரஸ் நோய் (COVID 19) தாக்கம் காரணமாக 15.04.2020 முதல் 03.05.2020 வரை மேற்கண்ட தடையுத்திரவை நீட்டித்து அமுலில் இருக்கும் என தெரிவித்தது. இந்நிலையில் அரசு அலுவலகங்கள் ஸ்தம்பித்த நிலையில் உள்ளதால் மேற்கண்ட பணிக்கான அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் செய்ய கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுதுள்ள விலை விகிதத்தில் தற்பொழுது பராமரிப்பு பணி செய்து வரும் நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை 01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாத காலங்களுக்கு நீட்டித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. 01.04.2020 முதல் 30.06.2020 ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 0403 /2020/இ2 )

7. . இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் கணிணி பிரிண்டரில் உள்ள டோனார்கள் புதிதாக வாங்கி வழங்கம் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 453 நாள். 31.10.2019–ல் ரூ.95,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விலைப்புள்ளி 08.04.2020–ல் கோரப்பட்டதில் வரப்பெற்றவை

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | AIMS | 95,000/– |
| 2 | TECHNO Solutions | 98,250/ |
| 3 | Hi-Tech Systems | 99,000/ |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள AIMS நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

கோ. எண். 3110 / 2017 / பி4

8 பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குள் வார்டு A, பிளாக் 11, T.S.No.3/2, 6, 7, 0.82 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அனுமதியற்ற மனைப் பிரிவு கொள்கையளவில் உதவி இயக்குநர் விழுப்புரம் நகர் ஊரமைப்பு துறையின் கடிதம் எண்.47/2019/வி.ம. நாள் 21.01.2019ல் கொ.ஒ.ம.வ./ ந.ஊ.உ.இ. (வி.ம.) எண். R141/2019 என எண்ணிடப்பட்டு வரப்பெற்றுள்ளது. இம்மனைப் பிரிவினை மன்றத்திற்கு பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

வார்டு A, பிளாக் 11, T.S.No.3/2, 6, 7, 0.82 ஏக்கர் அங்கீகரிக்கப்டாத மனைப் பிரிவாகும். இம்மனைப் பிரிவு அரசாணை எண்.78, 172–ன்படி உதவி இயக்குநர், விழுப்புரம் நகர் மனை ஊரமைப்பு துறை கொ.ஒ.ம.வ,/ந.ஊ.உ.இ. (வி.ம.) எண். R141/2019 என எண்ணிடப்பட்டு வரப்பெற்றுள்ளது. இம்மனைப்பிரிவில் உள்ள சாலை, பூங்காவினை தானமாக பத்திரம் பதிவு செய்து தர மனுதாரரை (திருமதி.அம்பிகா) கோரலாம். மேலும் தனித்தனி மனைக்கு கட்டணம் செலுத்திடவும் அனுமதி (தடையின்மை) கோரினால், அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.644/2019/எப்.1

9. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 32222/2018/OP2 நாள். 09.03.2020–ல் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருகை புரியும் பொழுது அடையாள அட்டை கட்டாயம் அணிய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து இந்நகராட்சியில் பணிபுரியும் உள்புற மற்றும் வெளிப்புற அலுவலர்கள் / பணியாளர்கள் மொத்தம் 200 பணியாளர்களுக்கு அடையாள அட்டை அவசர அவசியம் கருதி மூன்று நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது அதன் விவரம் கீழ்கண்டவாறு

| | |
|---|---|
| **1. Aims, Net cafe. Panruti** | **- Rs. 225/-** |
| **2. TECHNO SOLUTION** | **- Rs. 250/-** |
| **3.HI TECH SYSTEMS** | **- Rs. 240/-** |

மேற்கண்ட மூன்று நிறுவனங்களில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Aims, Net café, Panruti அவர்களுக்கு பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1.மன்றம் அனுமதிக்கலாம்

2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Aims, Net café, Panruti அவர்களுக்கு பணி ஆணை வழங்கவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 503/2019/சி1

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 30–04–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
பண்ணுருட்டி நகராட்சி.